திரு. சி. கோவிந்தராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பதவிகளையெல்லாம் சுழற்சி முறையிலே நிரப்பிக் கொண்டிருந்தால் நிரந்தரமாக இந்தப் பதவிகளுக்குப் பொறுப்பு கொடுப்பது எப்போது? அப்படிப்பட்ட நிலைமைகள் வராமலே போய்விடுமே. அதற்கு ஏதாவது அரசின் ஏற்பாடு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, யாருடைய பணியும் நிரந்தரம் இல்லை. அதுவும் ஒரு குறிப்பிட்ட பொறுப்பிலேயே இருக்கவேண்டும் என்று கருதினால் அது தவறு. கல்வித் துறையினைப் பொறுத்தவரையில் ஆசிரியர் பணியும், ஆசிரியர்களைப் பற்றிய பிரச்சினைகளைக் கவனிக்கிற பணியும் இரண்டும் interlinked—ஏறத்தாழ இரண்டும் தொடர்புடைய பணியாக ஒன்றோடொன்று உறவுடைய பணியாகத்தான் இருக்கிறது. இது அவர்களுக்கிடையிலே, ஒரு சங்கத்தினுடைய, தலைவர், செயலாளர் தேர்ந்தெடுக்கப்படுகின்றபோது, ஒவ்வொருவராக மாறித் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதைப்போல, அவர்களிடையிலும் இதற்கான ஆர்வம் உடையவர்கள் இடம் பெறுவதற்கான வழி, வாய்ப்பு இருக்கத்தான் வேண்டும்.

அரசு உயர்நிலைப் பள்ளி.

*3341—திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மாவட்டம், திருப்பூரில் உள்ள வேலம்பாளையம் பேரூராட்சியில் அரசு உயர்நிலைப் பள்ளி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 30,000-க்கும் அதிகமான மக்கள் வசிக்கக்கூடிய அந்த வேலம்பாளையம் பேரூராட்சிப் பகுதியிலிருந்து, அங்கே இருக்கக்கூடிய மாணவர்கள் 5, 6 கிலோ மீட்டர் தூரமுள்ள திருப்பூர் நகருக்குத்தான் உயர்நிலைப் பள்ளிக்கோ, மேல் நிலைப் பள்ளிக்கோ வரவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அங்கு ஒரு உயர்நிலைப் பள்ளி உருவாக்க அரசு இனியாகிலும் முயற்சிக்குமா?

1990 ஏப்ரல் 20]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அந்த வட்டாரத்திலே இருந்து பல நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக்கப்படவேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். பல நடுநிலைப்பள்ளிகள் அவ்வாறு கேட்கிற போது நடுநிலையாக முடிவு எடுக்கமுடியாத காரணத்தால், இதுபற்றி இப்போது அரசாங்கம் தீர்மானிக்க முடியவில்லை.

திரு. சி. கோவிந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உயர்நிலைப் பள்ளிக்கான இடத்திற்காக 5 ஏக்கர் நிலமும் அதற்குரிய நன்கொடையும் கூட செலுத்தி இருப்பதாகப் பேரூராட்சியிலிருந்து தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறபோது, அந்த வேலம்பாளையம் பேரூராட்சிப் பகுதிக்குள் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் இருக்காது என்று கருதுகிறேன். ஆகவே, இந்தப் பகுதிக்கு முன்னுரிமை கொடுத்து அங்கே ஒரு உயர்நிலைப்பள்ளி தொடங்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, முதலிலேயே முன்னுரிமையைக் கொடுத்துவிட்டால், அதற்குப் பின்னால் மற்றவர்களுடைய உரிமை பாதிக்கப்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது பற்றி ஏதேனும் விளக்கம் தந்து அரசினுடைய இந்தத் துறை கவனிக்கவேண்டும் என்று விரும்புவார்களேயானால், விவரத்தை அனுப்பச் செய்தால், அதற்காக உள்ள உயர்மட்டக் குழு அந்தப் பள்ளிக் கூடத்தையும் பரிசீலிக்கும், அதுபோலவே பக்கத்திலே உள்ள வேறு பல பள்ளி நிர்வாகிகளும் கேட்டிருக்கிறார்கள். அவர்களையும் பரிசீலித்து எதற்கு அதிக வாய்ப்பு தரவேண்டுமோ, அந்த அடிப்படையிலே முடிவு எடுக்க முடியும்.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவிப் பணம்.

*5603—திரு. சா. கணேசன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவிப் பணம் ரூ. 250 என்றிருப்பதை ரூ. 400 ஆக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கேள்வியைப் பொறுத்து விடை, 'இல்லை' என்பதுதான் என்றாலும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு 350 ரூபாய் அளவிற்கு அவர்களுக்கு வழங்கப்படுகிற உதவித் தொகையை அதிகப்படுத்த அரசு முன் வந்துள்ளது.